மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 06–ம் நாள் திங்கட்கிழமை

அ.வ.எண்.107/24

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) செல்வி. கே. பத்மப்பிரியா B.A. B.L.Hons. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: பெரியதுரை | தேதி : 06.07.26 |
| வயது : | த/பெ : சுப்பையா |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>**06.07.26 முதல் விசாரணை தொடர்ச்சி வா.சா.1**</u>

தபசில் சொத்திற்கான புல வரைபடத்தின் சான்றிட்ட நகலினை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ 8** ஆகும். வழக்குரையில் தபசில் சொத்தில் வாதி அனுபவம் செய்ததற்கான 16.09.2025 மற்றும் 06.07.2026 தேதிகளுக்குரிய தீர்வை ரசீதினை(2 எண்ணம்) தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ 9** ஆகும். வழக்கு தபசில் சொத்திற்கான மின் கட்டண அட்டையின் அசலினை தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ 10** ஆகும். வாதியின் ஆதார் அட்டையினை தாக்கல் செய்கிறேன். அது அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு **வா.சா.ஆ 11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.